RT.102508181IN
26-8-24

Q3/19112/24

## சுருக்கம்

சிவகங்கை மாவட்டம் – காரைக்குடி நகராட்சியுடன் கண்டனூர், கோட்டையூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும், சங்கராபுரம், கோவிலூர், இலுப்பக்குடி, அரியக்குடி மற்றும் தளக்காவூர் (மானகிரி) ஆகிய ஐந்து கிராம ஊராட்சிகளையும் இணைத்தல் – ஆணைகள்– வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண்.102**

நாள்: 10.08.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி, ஆடி 25

படிக்கப்பட்டன:

(1) அரசாணை (நிலை) எண்.55, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 15.03.2024.

(2) சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.3979/2023/எப்1, நாள் 11.07.2024.

(3) நகராட்சி நிருவாக இயக்குநரின் கடித ந.க.எண்.7145/2023/எம்ஏ2, நாள் 12.07.2024.

(4) அரசு கடித எண்.1453/தேர்தல்/2024–4, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 05.08.2024.

******

PA (PD)
3 SEP 2024

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், காரைக்குடி நகராட்சியுடன் கண்டனூர், கோட்டையூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும், சங்கராபுரம், கோவிலூர், இலுப்பக்குடி, அரியக்குடி, தளக்காவூர் (மானகிரி) ஆகிய ஐந்து கிராம ஊராட்சிகளையும் இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக அமைத்துருவாக்கலாம் என்ற அரசின் உத்தேச முடிவு குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வறிவிக்கை 15.03.2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரது கடிதத்தில், காரைக்குடி நகராட்சியுடன் இரண்டு பேரூராட்சிகள் மற்றும் ஐந்து ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக தோற்றுவிப்பதற்கு, கோட்டையூர் மற்றும் கண்டனூர் பேரூராட்சிகளின் மன்றங்கள் ஆதரவாகவும், சங்கராபுரம், கோவிலூர், இலுப்பக்குடி, அரியக்குடி, தளக்காவூர் (மானகிரி) ஆகிய ஐந்து கிராம ஊராட்சிகளின் மன்றங்கள் எதிர்ப்பு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. மேலும், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது கடிதத்தில், திரு.அ.வைரமுத்து, இலுப்பக்குடி ஊராட்சி மன்றத் தலைவர், இலுப்பக்குடி ஊராட்சியை காரைக்குடி பெருநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்த வேண்டாம் என ஆட்சேபனை தெரிவித்து மனுக்கள் அளித்துள்ளதாகவும், திரு.சுப்பையா, அரியக்குடி ஊராட்சி மன்றத் தலைவர், அரியக்குடி ஊராட்சியை காரைக்குடி பெருநகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்த வேண்டாம் என ஆட்சேபனை தெரிவித்து மனு அளித்துள்ளாதவும் தெரிவித்துள்ளார்.

4. மேலும், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது கடிதத்தில், திரு.அ.வைரமுத்து, இலுப்பக்குடி ஊராட்சி மன்றத் தலைவர், சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் நீதிப் பேராணை மனு [Writ Petition (MD)No.5317/2024] தொடர்ந்ததில், சென்னை உயர்நீதி மன்றம் மதுரைக் கிளை 06.03.2024 ஆம் நாளிட்ட தனது தீர்ப்பில் வழக்கினை தள்ளுபடி செய்தும், மனுதாரரது 26.12.2023 ஆம் நாளிட்ட மனுவினை பரிசீலனை செய்யுமாறும் அரசிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

5. இருப்பினும், சங்கராபுரம் மற்றும் இலுப்பக்குடி ஊராட்சி பகுதிகளில் அழகப்பா பல்கலைக்கழகம், பொறியியல், கலைக்கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி ஆகியன இயங்கி வருகின்றன. இதனால், காரைக்குடி உயர்கல்வி துறையில் முக்கிய இடத்தில் உள்ளதாகவும், அத்துடன் வணிக நிறுவனங்கள் / குடியிருப்புகள் அதிகளவு நிறைந்த பகுதியாக உள்ளதை அடிப்படையாகக் கொண்டு மாநகராட்சியாக தரம் உயர்த்துவதால் அப்பகுதியில் வாழும் மக்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை கூடுதலாக ஏற்படுத்தி தர வாய்ப்பாக அமையும் என சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

6. மேலும், காரைக்குடி நகராட்சியுடன் இணைக்கப்படவுள்ள இரண்டு பேரூராட்சிகள் மற்றும் ஐந்து ஊராட்சிகள் அனைத்தும் நகர்ப்புர வளர்ச்சிக்கு ஏற்றாற்போல், அதிகளவு வளர்ச்சியடைந்து வருவதும், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில், அழகப்பா பல்கலைக்கழகம், மத்திய வேதியியல் ஆராய்ச்சி நிலையம், பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், வழிபாட்டு தலங்கள் ஆகியவை மாநகராட்சி பகுதிக்குள் உள்ளடக்கிய பகுதியாக அமைய உள்ளது என்பதாலும், சுற்றியுள்ள பகுதிகள் நகரமயமாவதால், மாநகராட்சியாக தோற்றுவிப்பதன் மூலம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன், சுத்தமான குடிநீர் வசதிகள், தரமான சாலைகள், தெரு மின்விளக்குகள், உள்ளிட்ட அடிப்படை வசதிகள், மேம்படுத்தப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் போன்றவை பொதுமக்களுக்கு கிடைக்கும். மேலும், இந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் புதிய தொழிலகங்கள் ஏற்படவும், புதிய வேலை வாய்ப்புகள் உருவாகவும், ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் உயரவும் நகர்ப்புரத்திற்கு இணையான கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

7. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட நகராட்சி நிருவாக இயக்குநர் கடிதத்தில், மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைக்கேற்ப, காரைக்குடி நகராட்சியுடன் கண்டனூர், கோட்டையூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் சங்கராபுரம், கோவிலூர், இலுப்பக்குடி, அரியக்குடி, தளக்காவூர் (மானகிரி) ஆகிய ஐந்து கிராம ஊராட்சிகளையும் ஒன்றிணைத்து காரைக்குடி மாநகராட்சியாக உறுதியாக்கம் செய்து அரசாணை பிறப்பிக்க அரசிற்கு பரிந்துரை செய்து மேலனுப்பி வைத்துள்ளார்.

8. அரசின் உத்தேச முடிவு தொடர்பாக அரசில் பெறப்பட்ட மனுக்கள் மீதான உரிய பரிசீலனைக்குப் பின்னர், மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தக்க காரணங்களின் அடிப்படையில் அம்மனுக்கள் நிராகரிக்கப்பட்டு மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

9. உத்தேச காரைக்குடி மாநகராட்சிக்கு அருகிலுள்ள பகுதிகள் நகரமயமாகி வருவதால் அதற்கேற்ப பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும், தேவைகளையும் எதிர்ப்பார்ப்புகளையும் நிறைவு செய்வது மிகவும் அவசியமாகிறது. காரைக்குடி நகராட்சி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், ஆன்மீக சுற்றுலா நகரமாகவும் விளங்குகின்றது. எனவே, அதிகரித்துவரும் நகரமயமாதல், மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக தரமான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள், கழிவு நீர் அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளை நிறைவேற்ற மிகப்பெரிய திட்டங்கள் உருவாக்க வேண்டியுள்ளது. காரைக்குடி நகரில் வேளாண்மை அல்லாத நடவடிக்கைகளில் வேலைவாய்ப்பின் சதவீதம் பொருளாதாரம், கல்வி மற்றும் சுற்றுலா சார்ந்த பணிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே, பொது மக்களின் நலன் கருதி, காரைக்குடி நகராட்சியுடன் அதன் அருகிலுள்ள பகுதிகளை இணைத்து காரைக்குடி மாநகராட்சியாக உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது.

10. இந்நிலையில், அரசு இச்செயற்குறிப்பின் மீதான கவனமான பரிசீலனைக்குப் பின்னர் நகராட்சி நிருவாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, காரைக்குடி மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, காரைக்குடி நகராட்சியுடன் கண்டனூர், கோட்டையூர் ஆகிய இரண்டு பேரூராட்சிகளையும், சங்கராபுரம், கோவிலூர், இலுப்பக்குடி, அரியக்குடி மற்றும் தளக்காவூர் (மானகிரி) ஆகிய ஐந்து கிராம ஊராட்சிகளையும் இணைக்கலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வுறுதியாக்கம் குறித்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் பிரிவு 3(2)(d)–ன் கீழ் அறிவிக்கை வெளியிடப்படும். இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கை (ஆங்கிலத்தில்), 10.08.2024 ஆம் தேதியிட்ட <u>தமிழ்நாடு அரசிதழின்</u> சிறப்பிதழில் வெளியிடப்படும்.

11. இவ்வாணை வெளியிடப்படுவதால், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளின் தற்போதைய பதவிக்காலம் பாதிக்கப்படாது. மேலும் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா.கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01.
(இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிருவாக இயக்குநர், சென்னை–28.

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர்.
காரைக்குடி நகராட்சி ஆணையர் (நகராட்சி நிருவாக இயக்குநர் வழியாக).
தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர்கள், (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

**நகல்:**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09.
மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–09.
சட்டத்துறை, சென்னை–09.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
செயலாளர், தமிழ்நாடு மறுவரையறை ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5, ந.ப.1 மற்றும் அ.ந.2) துறை, சென்னை–09.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

10.8.24.

**பிரிவு அலுவலர்.**

10.8.24

## APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred under clause (d) of sub-section (2) of section 3 of the Tamil Nadu Urban Local Bodies Act, 1998 (Tamil Nadu Act 9 of 1999), the Governor of Tamil Nadu, after considering the objections and recommendations received, hereby declares the constitution of the entire local areas comprised within the local bodies specified in column (2) of the Table below, as Karaikkudi City Municipal Corporation, the intention of the same having been previously published, as required under clause (c) of sub-section (1) of the said section 3:—

### THE TABLE.

| Serial No. | Name of the local bodies. |
|---|---|
| (1) | (2) |
| (1) | Karaikkudi Municipality |
| (2) | Kandanur Town Panchayat |
| (3) | Kottaiyur Town Panchayat |
| (4) | Sankarapuram Village Panchayat |
| (5) | Kovilur Village Panchayat |
| (6) | Iluppakudi Village Panchayat |
| (7) | Ariyakudi Village Panchayat |
| (8) | Thalakavur (Managiri) Village Panchayat |

Based on the above constitution, wards will be divided for the next ordinary election.

2. It shall come into force on and from the 12th August 2024.

**D.KARTHIKEYAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

**Section Officer.** 10.8.24

10.8.24